# Sub Court, Eraniel

O.S. No.130/2022
Date:02.03.2026.
DW1 - திருமதி. சுஜா

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்குப்பட்டிகை சொத்தும், கூடுதல் சொத்துக்களும் ஆதியில் ஐயப்பன் பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். ஐயப்பன் பிள்ளை 1116 ல் M.E அதாவது 1941 ல் அவரது பிள்ளைகளான வேலாயுதன் பிள்ளை, நீலகண்ட பிள்ளை, தானு பிள்ளை மற்றும் ராமலிங்கம் பிள்ளை ஆகியோருக்கு பாக உடன்படிக்கை பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றாலும், அது இந்த வழக்கில் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், சரிதான். வா.சா.ஆ.1 ன் படி ஐயப்பன் பிள்ளையின் மகன் வேலாயுதன் பிள்ளைக்கு B பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். வேலாயுதன் பிள்ளையின் மகன் தான் 1ம் பிரதிவாதி ஆகிய எனது தகப்பனார் ஐயப்பன் பிள்ளை என்றால், சரிதான். வேலாயுதன் பிள்ளை என்பவர் எனக்கும், வாதிக்கும் தாத்தா முறை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பத்திரம் வேலாயுதன் பிள்ளை உயிருடன் இருக்கும் பொழுது அவருடைய பிள்ளைகளான ஐயப்பன் பிள்ளை மற்றும் பகவதி பிள்ளைக்கும் உயில் ஒன்று எழுதி வைத்தார் என்றால், சரிதான். அந்த உயிலின் படி A பட்டிகை சொத்துக்கள் எனது தகப்பனாரான ஐயப்பன் பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த வேலாயுதன் பிள்ளை தற்போது உயிருடன் இல்லை என்றால், சரிதான். அந்த உயில் படி உள்ள A பட்டிகை சொத்தான ரீசர்வே எண்.434/7 ல் உள்ள 16.750 சென்ட்கள் தான் இந்த வழக்கின் தாவா சொத்து என்றால், சரிதான். இந்த 16.750 சென்ட் தான் தெற்கனைய பாதி 8.250 சென்ட்களை எனது தகப்பனார், என் பெயரில் 2014 ல் செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்தார் என்றால், சரிதான். அந்த செட்டில்மென்ட் ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த வா.சா.ஆ.2 ன் படி கிழக்கு எல்லை இரணியல் – தக்கலை மெயின் ரோடு என்றால், சரிதான். அதில் தெற்கு எல்லை எனது தகப்பனாரின், "தனது கிடப்பு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ன் படி Road Frontage முழுவதும், எனக்கு உண்டு

என்றால், சரிதான். தெற்கு பக்கம் உள்ள எனது தகப்பனாரின் சொத்திற்கு Road Frontage கிடையாது என்றால், சரிதான். எனது தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தில், இந்த வழக்கின் வாதி சாட்சி கிடையாது என்றால், சரிதான். எனவே வழக்கின் வாதிக்கு அந்த செட்டில்மென்ட் ஆவணம் பற்றிய விபரங்கள் தெரியாது என்றால், சரியல்ல. வாதிக்கு 03.07.2022 ல் தான் மேற்படி செட்டில்மென்ட் பற்றி தெரியவந்தது என்றால், சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனாரின் வழி தாத்தாவிற்கு குடும்ப சொத்து என்றால், சரிதான். எனவே எனது தகப்பனாருக்கோ அவருடைய தகப்பனாருக்கோ, மேற்படி சொத்து அவர்களுடைய தனிப்பட்ட சொத்து கிடையாது என்றால், சரியல்ல. எனது தகப்பனாருக்கு உயில் மூலம் கிடைத்த அவருடைய சொத்து. குடும்ப சொத்து என்பதால், எனது தகப்பனாருக்கு வழக்குப்பட்டிகை சொத்தில் 1/3 பகுதி மட்டும் தான் அவகாசம் உண்டு என்றால், சரியல்ல. எனவே பாகப்பிரிவினை செய்வதற்கு முன்பு அவருக்கு என் பெயரில் பாதி சொத்து எழுதுவதற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால், சரியல்ல. அவருக்கு உரிமையில்லாத சொத்தினை எனக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்து உள்ளதால், அந்த செட்டில்மென்ட் நிலைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்து இன்று வரையில் பாகப்பிரிவினை செய்யப்படாத காரணத்தால், வாதிக்கு அதில் 1/3 பாகம் உண்டு என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் 4 ஆகிய கர ரசீதுகள் மற்றும் பட்டாவின் அடிப்படையில் நான் வழக்கு பட்டிகை சொத்தில் முழு உரிமை எதுவும் கோர முடியாது என்றால், சரியல்ல. எனது தகப்பனால் இறந்த பிறகு வாதியான எனது அக்கா பிராதினை திருத்தம் செய்தார் என்றால், சரிதான். அதற்கு நான் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அதில் எனது தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் படி பட்டிகை சொத்தின் முழு உரிமையும் எனக்கு உரியது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். எனது தகப்பனார் இறந்த பிறகு வாதி பிராதினை திருத்தம் செய்த போது, என் பெயரில் உள்ள செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள சொத்தினை தவிர்த்து மீதி உள்ள சொத்தில் பாதி பாகம் தனக்கு உரிமை என்று வழக்குரை தாக்கல் செய்தார் என்றால், அது விபரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு வழக்கு பட்டிகை சொத்தில் முழு உரிமை கிடையாது என்ற காரணத்தால் தான், வாதி தனக்குரிய 1/3 பாகம் கோரி இந்த வழக்கு செய்கிறார் என்றால், சரியல்ல. எனது தகப்பனார் வாதிக்கு சொத்தினை கொடுத்தார் என்று நீதிமன்றத்தில் நான் ஆவணம் எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வாதிக்கு அவருக்குரிய பாகத்தை கொடுக்க கூடாது என்ற உள்நோக்கத்துடன் நான் எதிர் வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.